# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருக்கோவிலூர்.

முன்னிலை : **திருமதி. ஜி பத்மாவதி, பி.ஏ., பி.எல்.,**
நீதித்துறை நடுவர்,
திருக்கோவிலூர்.

2018ம் ஆண்டு ஜுன் திங்கள் 28ம் நாள் திருவள்ளுவராண்டு 2049
ஸ்ரீவிளம்பி வருடம் ஆனி திங்கள் 14ம் நாள் வியாழக்கிழமை.

## ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 01/2017

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்.
திருக்கோவிலூர்.குற்ற எண். 07/2013.

.....குற்றமுறையிடுபவர்

**/எதிர்/**

1. ஜெயசீலன், வயது 29/13.
   த/பெ.ஜெயராஜ்.
2. ஜெயராஜ் வயது 56/13
   த/பெ. ஈசாக்கு.
3. சகுந்தலா, வயது 50/13
   க/பெ.ஜெயராஜ்.
   இவர்கள் அனைவரும்
   மணலூர்பேட்டை,
   திருக்கோவிலூர் வட்டம்,
   விழுப்புரம் மாவட்டம்.

.....எதிரிகள்

இந்த வழக்கு 02.01.2017 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.ராகவன்,பி.காம்.,பி.எல்., மற்றும் K.ராஜசேகர்,பி.காம்.,பி.எல்.,அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கு 27.06.2018 அன்று

இறுதி விசாரணைக்கு வந்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கிடும்.

## தீர்ப்புரை

வாதிக்கும் 1வது எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டு ஐம்பை முருகன் கோவிலில் திருமணம் நடந்து என்றும், பின்னர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாகவும், 20.12.2012ம் வாதி ரூ.1 லட்சம் வாங்கிவந்து கொடுத்தும், எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து கொண்டு வாதியை கொடுமை செய்து வந்ததாகவும், 21.01.2013ம் தேதி 11.00 மணியளவில் வாதியின் மாமனார் ஜெயராஜ் வந்து இந்த வண்ணாரநாயை அடித்து கொலை செய்தாலும் யாரும் ஒன்றும் கேக்க மாட்டார்கள் என்றும், இவள் வாழ வேண்டும் என்றால் 3 லட்சம் பணம், 30 பவுன் நகை மற்றும் 4 சென்ட் இடமும் வேண்டும் என்று அடித்து கொடுமை செய்து வீட்டைவிட்டு தரத்தி விட்டனர் என்றும், வாதியின் பெற்றோர் கேட்கும் பணம் தர முடியாது என்று கூறியதால் ஆத்திரம் அடைந்த எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாதியின் பெற்றோர்களை அடித்து கொடுமை செய்து துரத்தியுள்ளனர் என்றும், வாதியின் கணவர் வாதியை பார்த்து நீ போலிசக்கு சென்றால் உன்னையும் உன் அப்பாவையும் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததால் எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 294(b), 506(ii) IPC, r/w. 4 of D.P Actன்படி குற்றம் புரிந்துள்ளதாக திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு குற்ற விசாரணை நடைமுறைச்சட்டம் 207வது பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல் வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து குற்றங்கள் பற்றி வினவியபோது,

எதிரிகள் குற்றத்தை மறுத்தார். இருதரப்புகளும் கேட்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 294(b), 506(ii) IPC, r/w. 4 of D.P Actன்கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து படித்துக்காட்டி, விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தார்கள்.

3. புகார்தாரர்களும், எதிரிகளும், வழக்கை குறித்து சமாதானமாக சென்றுவிட்டதாக சமாதான மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி செய்யப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் 3 வரை குறியீடு செய்யப்பட்டது. சான்றுப்பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.**

அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னை யாரும் வரதட்சணை கேட்டு அடித்து துன்புறத்தவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த புகார் நான் கொடுத்ததுதான் என்றும், அது அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், வழக்கு சம்மந்தமாக சமாதனம் ஆகிவிட்டோம் என்றும், சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2, 3 தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரிகள் தங்களது மகளிடமும்,

தங்களிடமும் வரதட்சணை கேட்டு துன்புறுத்தவில்லை என்றும், தன் மகளும், தன் மாப்பிள்ளையும் தற்போது சமூகமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், போலிசார் தங்களை விசாரித்தார்கள் என்றும் அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

7. இவ்வழக்கின் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.4 திருமதி. இ.மங்கையர்கரசி, ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தான் தற்போது திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இவ்வழக்கில் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல் உதவி ஆய்வாளர் லட்சுமி என்பவர் ஓய்வுபெற்றுள்ளார் என்றும், தான் அவருடன் பணியாற்றிய வகையில் அவரின் கையொப்பம் தனக்கு தெரியும் என்றும், எனவே இவ்வழக்கில் கூடுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 08.03.13ம் தேதி காவல் ஆய்வாளர் லட்சுமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ஜானகி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரை பெற்று திருக்கோவிலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய கு.எண்.7/13 இதச பிரிவு 498(A), 294(b), 506(ii) IPC, r/w. 4 of D.P Actன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், அது அ.த.சா.ஆ.2 என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் ஜானகி காத்தவராயன், தனமணி, தமிழ்செல்வன், ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் தமிழ்செல்வன், லட்சுமணன் ஆகியோர்களை 12.08.13ம் தேதி தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் புகார் தாரர் ஜானகி என்பவருக்கு எதிரி ஜெயசீலன் என்பவருக்கும் இடையே நடந்த திருமணம் சம்மந்தமாக திருமணம் சம்மந்தமான திருமண பத்திரிகையை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளார் என்றும், அது அ.த.சா.ஆ.3 என்றும், இத்துடன் அவரின் புலனாய்வை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 294(b), 506(ii) IPC, r/w. 4 of D.P Actன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கின் சாட்சி ஜானகி, காத்தரவராயன், தனமணி, ஆகியோர்கள் எதிரிகளோடு நீதிமன்றத்திற்கு வெளியே சமாதனம் ஆகிவிட்டு அரசுக்கு சாகமாக சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக அமைந்த விஷயங்களை தொகுத்து கு.வி.மு.ச. 313 (1)(ஆ)-பிரிவின் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியத்தை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

9. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில்</u> எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

10. **<u>பிரச்சனை</u>** வாதிக்கும் 1வது எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டு ஐம்பை முருகன் கோவிலில் திருமணம் நடந்து என்றும், பின்னர் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததாகவும், 20.12.2012ம் வாதி ரூ.1 லட்சம் வாங்கிவந்து கொடுத்தும், எதிரிகள் மூன்று பேரும் சேர்ந்து கொண்டு வாதியை கொடுமை செய்து வந்ததாகவும், 21.01.2013ம் தேதி 11.00 மணியளவில் வாதியின் மாமனார் ஜெயராஜ் வந்து இந்த வண்ணாரநாயை அடித்து கொலை செய்தாலும் யாரும் ஒன்றும் கேக்க மாட்டார்கள் என்றும், இவள் வாழ வேண்டும் என்றால் 3 லட்சம்

பணம், 30 பவுன் நகை மற்றும் 4 சென்ட் இடமும் வேண்டும் என்று அடித்து கொடுமை செய்து வீட்டைவிட்டு தரத்தி விட்டனர் என்றும், வாதியின் பெற்றோர் கேட்கும் பணம் தர முடியாது என்று கூறியதால் ஆத்திரம் அடைந்த எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வாதியின் பெற்றோர்களை அடித்து கொடுமை செய்து துரத்தியுள்ளனர் என்றும், வாதியின் கணவர் வாதியை பார்த்து நீ போலிசுக்கு சென்றால் உன்னையும் உன் அப்பாவையும் கொன்றுவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததால் எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னை யாரும் வரதட்சணை கேட்டு அடித்து துன்புறத்தவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், அந்த புகார் நான் கொடுத்ததுதான் என்றும், அது அ.த.சா.ஆ.1 என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், வழக்கு சம்மந்தமாக சமாதனம் ஆகிவிட்டோம் என்றும், சமாதான மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் என்றும் அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2, 3 தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரிகள் தங்களது மகளிடமும், தங்களிடமும் வரதட்சணை கேட்டு துன்புறுத்தவில்லை என்றும், தன் மகளும், தன் மாப்பிள்ளையும் தற்போது சுமூகமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும், போலிசார் தங்களை விசாரித்தார்கள் என்றும் அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.1 முதல் 3 சாட்சிகள் அரசு தரப்பில் இருந்து விலகி பிறழ்சாட்சியாக சாட்சியம் அளித்திருப்பதால், மேற்கொண்டு சாட்சிகளை விசாரிக்கத் தேவையில்லை என அரசு தரப்பில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

12. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1, சம்பவத்தை நேரில் பார்த்த 2, 3 சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்காதபோது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ள அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியை சம்பவத்துடன் தொடர்புபடுத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்றும், எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளின் படி குற்றவாளி அல்ல என்றும் தீர்மானிக்கிறேன்.

13. முடிவில் 1 முதல் 3 எதிரிகள் பிரிவுகள் 498(A), 294(b), 506(ii) IPC, r/w. 4 of D.P Actன்கீழ் குற்றவாளி அல்ல என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறேன்.

14. இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 28.06.2018ந் தேதி அன்று அவையறிய திறந்த நீதிமன்றத்தில் என்னால் பகரப்பட்டது.

(ஓம்/-.ஜி.பத்மாவதி)<br>
நீதித்துறை நடுவர்,<br>
திருக்கோவிலூர்

<u>இணைப்பு</u>

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| 1. | திரு. ஜானகி (பிறழ்சாட்சி) |
| 2. | திரு. காத்தவராயன் (பிறழ்சாட்சி) |
| 3. | திரு. தனமணி (பிறழ்சாட்சி) |
| 3 | திரு. இ.மங்கயைர்கரசி, ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1 | 08.03.13 | புகார் |
| 2 | 08.03.13 | அச்சு முதல் தகவல் அறிக்கை |
| 3. | 21.08.09 | அன்று நடைபெற்ற திருமண பத்திரிகை |

| | | |
|---|---|---|
| **அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்** | : | இல்லை |
| எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப்பொருட்கள் | | இல்லை |

(ஓம்/-.ஜி.பத்மாவதி)
நீதித்துறை நடுவர்,
திருக்கோவிலூர்